தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரிய பொதுமக்கள் கருத்துக்கணிப்பு கூட்டத்திற்கு வருகை தந்திருக்கும் கோட்டாட்சியர், ஏனைய அதிகாரிகளுக்கும் மற்றும் பொதுமக்களுக்கும் தனது வணக்கத்தை தெரிவித்துக் கொண்டு இந்த பனம்பட்டி பஞ்சாயத்தை பொருத்தமட்டில் எந்தவித வருமானமும் இல்லை என்றும் இந்த கல்குவாரியை குத்தகைக்கு விட்டால் பஞ்சாயத்துக்கு அதில் இருந்து வருமானம் கிடைக்கும் என்று தெரிவித்தார். குடிநீர், மின்சாரம், சாலை வசதி மற்றும் பொதுமக்களுக்கு தேவையான பல திட்டங்களை அந்த கல்குவாரியின் மூலம் நிறைவேற்ற முடியும் என்று கூறினார். மேலும் அதில் கிடைக்கும் வரி பணத்தை தங்கள் பஞ்சாயத்திற்கு என்று குறிப்பிட்ட சதவீகிதம் அரசு ஒதுக்கிடுகிறார்கள். சில ஊர்களில் இதேபோன்று கல்குவாரிகள் இருக்கின்றன அதன் மூலம் கிடைக்கும் வருவாயை வைத்து கொண்டு அந்த ஊர் மக்களுக்கு தேவையான திட்டங்களை நிறைவேற்றிக் கொள்கிறார்கள் ஆனால் எங்கள் பஞ்சாயத்து எல்லைக்குட்பட்ட பகுதிகளில் எந்த கல்குவாரிகளும் இல்லை, அதனால் இந்தக் கல்குவாரியை குத்தகைக்கு விட்டால் இந்த பனம்பட்டி பஞ்சாயத்து வளர்ச்சி அடையும் என்று தெரிவித்து இத்திட்டத்திற்கு தனது ஆதரவு கருத்தினை பதிவு செய்தார்.

2. **திரு. சதிஷ்குமார், மருதான்தலை**

இங்கு வந்திருக்கும் கோட்டாட்சியர், வட்டாட்சியர் அவர்களுக்கும், சுற்றுச்சூழல் அதிகாரிகள் அவர்களுக்கும், இளைஞர்கள் சார்பாக வணக்கத்தை தெரிவித்துக்கொண்டு எங்கள் ஊரானது பனம்பட்டி, மருதான்தலையை சேர்ந்த ஒரு கிராமம். அவர்கள் கிராமம் வளர்ச்சி அடையாமல் இருப்பதாகவும் சாலைகள் சேதம் அடைந்திருப்பதாகவும் கூறினார். இந்த சேதம் அடைந்த சாலையை அரசு சரி செய்து தரும் என்று தெரிவித்தார். எங்கள் ஊருக்கு எந்த வசதியும் இல்லை, ஐயா சொன்னது

போல் இந்த கல்குவாரி எங்கள் ஊருக்கு வந்தால் ஏழை மக்களுக்கு நிறைய வேலைவாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்கும் நூறு அல்லது 150 பேர் வேலை பார்ப்பார்கள். வாகனங்கள் ஓட்டலாம் ஆகையால் இந்த கல்குவாரியினால் வரும் வேலை வாய்ப்பினை எதிர்நோக்கி காத்திருப்பதாக தெரிவித்தார். இந்தக் கல்குவாரி மூலமாக எங்கள் கிராமத்திற்கு நீர் வசதி, சாலை வசதி செய்து கொடுக்க வாய்ப்பு உள்ளதாக கூறினார். எங்களுக்கு அருகில் உள்ள திருவேங்கைவாசலில் இதேபோன்று கல்குவாரி மூலம் அந்தக் கிராம பஞ்சாயத்து மிகப் பெரிய ஒரு வளர்ச்சி அடைந்துள்ளதாகவும், அந்த ஊருக்கு தேவையான அனைத்தும் அங்கே உள்ளதாகவும் தெரிவித்தார். அதே போன்ற வளர்ச்சி தான் மேலூர் பஞ்சாயத்தும், வளர்ச்சி அடைந்து இருப்பதாக குறிப்பிட்டார். இது போல் நாங்களும் எங்களது மருதான்தலை, பனம்பட்டி பஞ்சாயத்தும் வளர்ச்சி அடைய வேண்டும் என்று எதிர்ப்பார்ப்பதாக தெரிவித்தார். எனவே, இந்த கல்குவாரி அமைவதற்கு எந்தவித எதிர்ப்பும் தெரிவிக்காமல் வரவேற்பதாக தெரிவித்து இத்திட்டத்திற்கு தனது ஆதரவு கருத்தினை பதிவு செய்தார்.

3. திருமதி. பிரியா, மருதான்தலை

எங்கள் வாழ்வாதாரம் பாதிக்கப்படாமல் இருக்க இந்த கல்குவாரி வரவேண்டும். மேலும் இந்த கல்குவாரி அமைவதனால், எங்கள் கிராமம் வளர்ச்சி அடையும் மற்றும் வேலைவாய்ப்பும் கிடைக்கும் என்று தெரிவித்தார். எங்கள் கிராமத்தில் நிறைய பேர் வேலை இல்லாமல் இருக்கிறார்கள் அவர்களுக்கு எல்லாம் வேலைவாய்ப்பு கிடைக்கும். எனவே இந்த கல்குவாரி எங்களுக்கு வேண்டும் என்று தெரிவித்து தனது ஆதரவு கருத்தினை தெரிவித்தார்.

4. **திருமதி. சாதனா ஜாக்குலின், பனம்பட்டி**

இந்த கல்குவாரி அமைவதனால் எங்களுக்கு வேலை கிடைக்கும். மேலும் குடிநீர் பிரச்சனையை சரி செய்து தருவதாக தெரிவித்துள்ளனர். எனவே இந்த குவாரி வருவதனால் எங்களுக்கு எந்த பிரச்சனையும் இல்லை என குறிப்பிட்டு தனது ஆதரவு கருத்தினை தெரிவித்தார்.

5. திருமதி. தமிழ்ச்செல்வி, மருதான்தலை

எங்களுக்கு இந்த கல்குவாரி அமைவதால் பல நன்மைகள் உள்ளன. எங்கள் ஊரின் சாலைகள் குண்டும் குழியுமாக உள்ளது. இந்த கல்குவாரி அமைவதன் மூலம் அதனை சரி செய்து கொடுப்பதாக தெரிவித்துள்ளனர். இந்த குவாரியினால்

எங்களுக்கு எந்த பிரச்சனையும் இல்லை. எங்களது கிராமத்தில் பேருந்து வசதியும் சரிவர இல்லை அதையும் சரி செய்து கொடுப்பதாக தெரிவித்துள்ளனர். எனவே, இந்த கல்குவாரியை அனுமதிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன் என்று குறிப்பிட்டு தனது ஆதரவு கருத்தினை தெரிவித்தார்.

6. திரு. மணிகண்டன், காமராஜபுரம், புதுக்கோட்டை

தி/ள். ஓம் ஸ்ரீ வாரி பிரைவேட் லிமிடெட் 4.77.0 ஹெக்டர் கல்குவாரினுடைய இந்த கருத்து கேட்பு கூட்டத்தில் எனது கருத்துக்களை கூற உள்ளதாக தெரிவித்தார். இந்த நிறுவனம் கொடுத்த இந்த குவாரினுடைய வரைபடத்தில் 300 மீட்டர் தொலைவில் மூன்று குளங்கள் உள்ளதாகவும், 500 மீட்டருக்குள் நான்கு குளங்கள் உள்ளன எனவும், இது சிறு கனிம சலுகை விதிகள் 1959-ல் பகுதி 30 இல் 1-ன் படி அனுமதி அளிக்க இயலாது என்று தெரிவித்தார். அனுமதி கேட்கப்பட்டுள்ள இந்த கல்குவாரியின் நடுப்பகுதியில் அரசு புறம்போக்கு நிலம் ஒன்று உள்ளதாகவும், அதற்கு 50 மீட்டர் இடைவெளி விடுவதாக கூறியிருக்கிறார்கள். ஆனால், ஏற்கனவே இது போன்ற குவாரிகளில் இவ்வாறு இடைவெளி விட்டு இருக்கிறார்களா என்று ஆய்வு செய்ய வேண்டும் என கேட்டுக்கொண்டார். இவற்றை கவனத்தில் கொண்டு இந்த கல்குவாரிக்கு அனுமதி வழங்கக் கூடாது என தெரிவித்தார். மேலும், இந்தப் பகுதி நிறைய பாசனம் உள்ள பகுதி எனவும், நமது நாடு விவசாயத்தை அடிப்படையாகக் கொண்ட நாடு, எனவே, வேளாண் உற்பத்தியே இங்கு முதன்மையாக்கப்பட வேண்டும் என்றும் இந்த நிலங்கள் எல்லாம் முற்போகம் விளையக்கூடிய நிலங்கள் என்று இந்த அறிக்கையிலே சொல்லப்பட்டிருக்கிறது என்று கூறினார். எனவே இங்கே இருக்கக்கூடிய நிலங்களின் மேல்பகுதியில் உள்ள மணல்கள் மற்றும் கற்களை எடுத்து கனிம வளங்களை அள்ளுகின்ற வேலைகளை செய்யாமல், வேளாண் உற்பத்திக்கு முன்னுரிமை தர வேண்டும் என்று குறிப்பிட்டார். ஏனென்றால் முற்போகம் விளையக்கூடிய நிலம் என்று அறிக்கையில் கொடுக்கப்பட்டதை கருத்தில் கொண்டு, வேளாண் உற்பத்திக்கு முக்கியத்துவம் கொடுத்து, கனிம வளங்களை பாதுகாக்க வேண்டும் என்று கூறினார். எனவே கல்குவாரிக்கு அனுமதி அளிக்க வேண்டாம். இந்த அனுமதி கேட்கப்பட்டுள்ள இரண்டு குவாரிகளுக்கும் இடையே ஒரு வாய்க்கால் உள்ளது. இந்த வாய்க்கால் 50 மீட்டர் ஆழம் கொண்டது. வாய்க்காலினுடைய ஆழம் நாம் அனைவரும் அறியக் கூடியது ஆனால் குவாரியினுடைய ஆழம் 150 மீட்டர் வரை வெட்டப்படும் என்று கூறப்பட்டுள்ளது. 50 மீட்டர் ஆழமுள்ள வாய்க்காலின் அருகே 150 மீட்டர் அளவிற்கு கல்குவாரி வெட்டப்பட்டால், இந்த வாய்க்காலில் செல்லும் நீர் எல்லாம் குவாரியிக்கு தான் சென்றடையும். இதன்

காரணமாகவே குவாரிக்க அனுமதி வழங்கக் கூடாது எனவும் இதுவும் சிறு கனிம சலுகை விதி 1959-ல் பகுதி முப்பது 1-ன் கீழ் குறிப்பிட்டுள்ளதாக தெரிவித்தார். இந்த கிராமத்தில் வரக்கூடிய சாலைகள் மிகவும் சேதம் அடைந்துள்ளதாக குறிப்பிட்டார். அதற்கு முக்கிய காரணம் அடிப்படையிலே இந்த சாலைகளில் ஆறு சக்கர வாகனங்கள் மட்டுமே அனுமதிக்கப்பட வேண்டும் என்று சட்டமே உள்ளதாகவும் அந்த ஆறு சக்கர வாகனத்தில் 18 டன் எடையுள்ள கற்கள் மட்டும் தான் அனுமதிக்க வேண்டும் என்ற சட்டம் உள்ளதாக தெரிவித்தார். ஆனால், அந்த சாலைகளில் 10 சக்கர வாகனங்களில் 60 டன், 90 டன் எடையுள்ள கற்களை ஏற்றிக் கொண்டு செல்வதாகவும், அதனால்தான் மக்கள் வரிப்பணத்தில் போடப்பட்ட சாலைகள், கிராம சாலைகள், பிரதம மந்திரி கிராம சாலைகள், திட்டத்தின் கீழ் போடப்பட்ட சாலைகள் என அனைத்து சாலைகளிலும் இதுபோன்ற கல்குவாரிகள் அதிக எடை கொண்ட லாரிகள் அரசு அனுமதியை மீறி ஓட்டி செல்வதால் மிகவும் பழுதடைந்துள்ளன என்று குறிப்பிட்டார். எனவே, இந்த சாலைகளை சரிப்படுத்தி தருவது ஏற்கனவே இயங்கிக் கொண்டிருக்கின்ற கல்குவாரிகளின் பொறுப்பு எனவும், அந்த கல்குவாரிகளுக்கு அரசு நோட்டீஸ் அனுப்பி சாலையை சரிபடுத்தி தருமாறு இந்த அரசு வழிவகுக்க வேண்டும் என கேட்டுக்கொண்டார். இனிவரும் காலங்களில் நான்கு அல்லது ஆறு சக்கர வாகனங்களை மட்டுமே இயக்க அனுமதிக்க வேண்டும் எனவும், அதிக எடை கொண்ட லாரிகளை இயக்கினால் அரசு சட்ட விதிகளின்படி நடவடிக்கை எடுக்க வேண்டும் என கேட்டுக்கொண்டார். IPCC-ன் உலக சுற்றுச்சூழல் தாக்கல் மதிப்பீட்டு அறிக்கை நேற்று வெளிவந்துள்ளது. அதன்படி இப்போது இந்த உலகமே புவி வெப்பமாதலுக்கு எதிராக செயல்பட வேண்டும் என்று இந்திய அரசும் அதில் கையொப்பமிட்டுள்ளது. எனவே, இங்கு உள்ள நீர் நிலைகளை எல்லாம் இது போன்ற கனிம வளங்களை எடுக்க பயன்படுத்தினால் சுற்றுச்சூழல் மிகவும் மோசம் அடையும், புவி வெப்பமாதல் மேலும் அதிகரிக்கும் என்று தெரிவித்தார். ஏற்கனவே. 2050 ஆம் ஆண்டு தான் பனி மலைகள் எல்லாம் உருகி பனிக்கட்டிகள் இல்லாத அண்டார்டிகா என்ற நிலையில், நேற்று வந்த உலக சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கையில் 2030-ல் அதாவது இன்னும் ஏழு வருடத்தில் பனிக்கட்டிகள் இல்லாத அண்டார்டிகா மாறிவிடும் என்று குறிப்பிட்டுள்ளதாக தெரிவித்தார். எனவே. இதனை கருத்தில் கொண்டு சுற்றுச்சூழலை பாதிக்கும், புவி வெப்பமாதலை ஏற்படுத்தும், இதுபோன்ற நிறுவனங்களை அரசு தொடர்ந்து அனுமதி அளிப்பதை தவிர்த்து சுற்றுச்சூழல் மாசை குறைக்கும், புவி வெப்பமாதலை குறைக்கும், நிறுவனங்களுக்கு அனுமதி அளிக்க வேண்டும் என்று தெரிவித்தார். இதே போன்று 5000 மரக்கன்றுகளை நடுவதாக அறிக்கையில் கூறியுள்ளார்கள். ஏற்கனவே. இந்த கல்குவாரி இயங்கிக் கொண்டிருக்கிறது. அந்த

குவாரிக்கு அனுமதி வாங்கும் போது இவர்கள் கொடுத்த அறிக்கையின்படி வாக்குறுதியின் படி மரக்கன்றுகள் நடப்பட்ட இருக்கிறதா இதனால் சுற்றுச்சூழல் தாக்கம் எவ்வளவு குறைந்துள்ளது என்பதை ஆய்வு செய்து, அதை இறுதி அறிக்கையாக வழங்க வேண்டும் எனக் கேட்டுக்கொண்டார். கல்குவாரி தொடங்குவதற்கு முன் இருந்த சுற்றுச்சூழல், புவி வெப்பமயமாதலின் அறிக்கையும் இப்போது உள்ள அறிக்கையில் உள்ள படி கட்டுப்படுத்தப்பட்டுள்ளதா என்பதனை ஆய்வு செய்து, அதனை கருத்தில் கொண்டு அதற்கு பின்பு தான் இந்த கல்குவாரிக்கு அனுமதி வழங்கலாமா, வேண்டாமா என்று பரிசீலனை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்வதாக தெரிவித்து தனது எதிர்ப்பு கருத்தினை பதிவு செய்தார்.

7. திரு. வீரகுமார், மாவட்ட செயலாளர், மார்க்ஸிட், கம்யூனிஸ்ட் கட்சி, புதுக்கோட்டை

கருத்து கேட்பு கூட்டத்திற்கு வருகை தந்திருக்கும் அதிகாரிகளுக்கும் கருத்துக்களை கூற வந்திருக்கும் கிராம பொது மக்களுக்கும் வணக்கத்தை தெரிவித்துக் கொண்டு எனக்கு முன்பாக பேசிய தோழர் மணிகண்டன் குறிப்பிட்டதை போல இந்த சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கையில் இருக்கின்ற முரண்பாடுகள் குறிப்பிடப்பட்ட அந்த மீட்டர் அளவுக்கு உள்ளே உள்ள குளங்கள், வாய்க்கால் பற்றி அவர் கூறியுள்ள கருத்துகளை நம் அதிகாரிகள் கவனத்தில் எடுத்து கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொண்டார். இந்த கல்குவாரி ஆவணங்கள் விதிமுறைக்கு உட்பட்டு இருக்கிறதா என்பதை ஆய்வு செய்ய வேண்டும் என்றும் மணிகண்டன் அவர்கள் கூறிய கருத்துக்களை வழிமொழிவதாக தெரிவித்தார். இயற்கை வளங்களை, கனிம வளங்களை நாம் சுரண்டி எடுப்பது அதனால் ஏற்படக்கூடிய சுற்றுச்சூழல் தாக்கங்கள் பற்றி ஏற்கனவே உலகில் மிகப்பெரிய அபாயம் ஏற்பட உள்ளதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன. இந்த குவாரிகள் தோண்டப்படுவது நம் உள்ளூர் தேவைக்காகவா என்பதை எண்ணி பார்க்க வேண்டும் என்று தெரிவித்தார். ஏனென்றால், பொதுமக்களிடம் ஒரு கருத்து பரப்பப்பட்டு அவர்களால் நம்பப்படுகிற அளவிற்கு அந்த கருத்து பரப்பப்படுகிறது. ஒரு குவாரி அமைந்து விட்டால், நமது பஞ்சாயத்து நமது கிராமமே அனைத்து வசதிகளையும் பெற்று விடும் என்கிற நம்பிக்கையை பொதுமக்களிடம் ஏற்படுத்திவிட்டார்கள். 75 ஆண்டுகள் கடந்துவிட்ட சுதந்திர நாட்டில் அடிப்படை வசதிகளை இன்னமும் பெற முடியவில்லை. ஒரு குவாரி அமைந்துவிட்டால் எல்லாமே நம் பகுதியிலேயே சொர்க்க பூமியாக மாறிவிடும் என்ற மனநிலையை பொதுமக்களிடம் பரப்பப்பட்டிருக்கிறது. பொதுமக்கள் நம்பிக் கொண்டிருக்கிறார்கள். அந்த நம்பிக்கை தவறானது என்று தெரிவித்தார். அரசின் மிக முக்கியமான

வருமானம் டாஸ்மார்க்கை நம்பிதான் இருக்கிறது அதை எப்படி விட முடியும் என்று அரசாங்கமே சொல்லக்கூடிய நிலைமை வந்துவிட்டது. எனவே, சுற்றுச்சூழல் பாதிப்பு என்பது உலகையே அச்சுறுத்தக் கூடியது என்பதை மக்கள் மறந்து விட்டதாக தெரிவித்தார். ஒரு குவாரி அமைந்துவிட்டால் எல்லாமே கிடைத்துவிடும் என்ற எண்ணத்தை மக்களிடம் விதைத்துவிட்டனர். அதே நேரத்தில் பல்வேறு இடங்களில் குவாரி அமைந்துள்ள கிராமங்களில் எல்லா வசதிகளையும் பெற்றுள்ளதா என்பதனை நம் பொதுமக்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். எத்தனையோ இடங்களில் குவாரிகள் உள்ளன ஒரு அரசினால் செய்ய முடியாததை, செய்து தராததை ஒரு குவாரி நிறுவனத்தால் செய்து கொடுக்க முடியுமா? மக்களை தன்னிறைவு அடைய செய்த கிராமமாக மாற்றமுடியுமா? என்ற கேள்வியை பொதுமக்கள் தான் தங்கள் மனதில் எண்ணிப் பார்க்க வேண்டும் என கேட்டுக்கொண்டார். இது நம் உள்ளூர் தேவைக்காக அல்லது நம் மாவட்ட தேவைக்காக இல்லாமல் இந்த கல்குவாரி மூலம் கற்களை மிக ஆழமாக எடுத்து விற்பது பல நிறுவனங்களுக்கு, கார்பரேட் கம்பெனிகளுக்கு மிகப்பெரிய லாபம் தருமே தவிர நம் மக்களுக்கு எந்தவித நன்மையும் இல்லை எனவும் அப்படி அமைய வேண்டும் என்றால் சுற்றுச்சூழல் விதிகளுக்கு உட்பட்டு பாதிப்பில்லாத இடத்தில் கல்குவாரி அமைய வேண்டும் என்று தெரிவித்தார். இந்தக் குவாரியினால் சுற்றுச்சூழல் பாதிப்பு என்ற கவலை இருப்பதால்தான் தோழர் மணிகண்டன் குறிப்பிட்ட இந்த சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டில் உள்ள குறைகளை நிவர்த்தி செய்து, அந்த குறைகளை சரிசெய்ய வேண்டும் எனவும், அதே போன்று பெரிய நிறுவனத்தின் நம்பகத்தன்மை என்பதை ஆய்வு செய்து அறிக்கையில் தர வேண்டும் என்று கூறி தனது எதிர்ப்பு கருத்தினை பதிவு செய்தார்.

**8. திரு. மாரிமுத்து, முன்னாள் கவுன்சிலர், மருதான்தலை**

பொதுமக்கள் கருத்து கேட்புக் கூட்டத்திற்கு வருகை தந்துள்ள இலுப்பூர் கோட்டாட்சியர், இலுப்பூர் வட்டாட்சியர், சுற்றுச்சூழல் பொறியாளர் மற்றும் பொதுமக்கள் அனைவருக்கும் வணக்கத்தை தெரிவித்தார். எனக்கு முன்பு இங்கு பேசியவர்கள் சொன்னார்கள், சுற்றுச்சூழலில் ஏற்படும் மாசுபாடு மற்றும் அதனால் ஏற்படும் கேடுகளைப் பற்றி சொன்னார்கள் குவாரிகளால் நிலத்தடி நீர் கீழ் செல்லவில்லை முன்பெல்லாம் 15 அடியில் தோண்டினால் தான் நிலத்தடி நீர் கிடைக்கும் இப்பொழுது 300 அடி ஆழத்திற்கு போர் போட்டா தான் நிலத்தடி நீர் கிடைக்கிறது அது மட்டும் இல்லாமல் தற்போது எல்லா வீட்டிலேயும் போர் உள்ளது எனவும், அதனால் குவாரிகளால் தான் நிலத்தடி நீர் கீழ் செல்வது என்று சொல்ல

முடியாது என்று குறிப்பிட்டார். எங்கள் ஊரில் மழை பெய்தால் தான் விவசாயம் செய்ய முடியும் மழை பெய்யாமல் விவசாயம் செய்ய முடியாமல் இருக்கும் பொழுது பக்கத்து ஊர்களில் இருக்கும் கிரஷர்கள், குவாரிக்கு எங்கள் ஊர்களில் இருந்து தினம்தோறும் 100, 200 பேர் வேலைக்கு செல்வதாக தெரிவித்தார். எங்கள் ஊருக்கு குவாரி வருவதனால் எங்கள் ஊராட்சி தன்னிறைவு அடையும். எங்கள் ஊருக்கு அருகில் இருக்கும் மேலூர் ஊராட்சி, மதியநல்லூர் ஊராட்சி மற்றும் இரும்பாளி ஊராட்சி இதற்கு முன்னுதாரமாக எடுத்துக் கொள்ளலாம் என தெரிவித்தார். இந்த குவாரிகளால் ஊராட்சிக்கு வருமானம் வருகிறது. அந்த வருமானத்தை வைத்து அந்த ஊராட்சி அடிப்படை வசதிகளை பூர்த்தி செய்து கொள்வதாக தெரிவித்தார். ஆகையால், இந்த கல்குவாரிக்கு தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் வழிமுறைகளோடு பொதுமக்களுக்கு எவ்வித இடையூறும் இன்றி அனுமதி வழங்க கேட்டுக்கொள்வதாக கூறி தனது ஆதரவு கருத்தினை தெரிவித்தார்.

### 9. திரு. முகிலன், ஒருங்கிணைப்பாளர், தமிழ்நாடு சுற்றுச்சூழல் பாதுகாப்பு இயக்கம்

பனம்பட்டி கிராமத்தில் திருவாளர் சென்னையைச் சேர்ந்த தி/ள். ஓம் ஸ்ரீ வாரி ஸ்டோன்ஸ் பிரைவேட் லிமிடெட், 4.77.0 ஹெக்டேர் பரப்பளவில் அமைய இருக்கும் கல் குவாரி கருத்து கேட்பு கூட்டத்தினுடைய தலைவர் மதிப்பிற்கும் மரியாதைக்கும் உரிய இலுப்பூர் கோட்டாட்சியர் அவர்களே, இந்த கூட்டத்தை வழிநடத்திக் கொண்டுள்ள புதுக்கோட்டை மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அவர்களே, மற்றும் இங்கு இக்கூட்டத்தில் கலந்து கொண்டுள்ள வருவாய்த்துறை, மாசு கட்டுப்பாடு வாரியம் உள்ளிட்ட பல்வேறு துறை அதிகாரிகளுக்கும், பொதுமக்களுக்கும், கல்குவாரி உரிமையாளருக்கும், கல்குவாரி உரிமையாளர்களால் அழைத்து வரப்பட்டிருக்கும் சமூக செயல்பாட்டாளர்களுக்கும், பத்திரிகையாளர்களுக்கும் நாங்கள் சார்ந்துள்ள தமிழ்நாடு சுற்றுச்சூழல் பாதுகாப்பு இயக்கத்தின் சார்பாக வணக்கத்தை தெரிவித்துக் கொண்டார். எனது பெயர் முகிலன் நான் தமிழ்நாடு சுற்றுச்சூழல் பாதுகாப்பு இயக்கத்தினுடைய ஒருங்கிணைப்பாளராக உள்ளதாகவும், மாண்புமிகு சென்னை உயர் நீதிமன்றமும், மாண்புமிகு டெல்லி உச்ச நீதிமன்றமும் அமைத்த கிரானைட் முறைகேடு பற்றிய ஆய்வுக்கான இந்த பகுதியைச் சேர்ந்த மேன்மைமிகு ஆட்சித் தலைவர் சகாயம் அவர்களின் தலைமையிலான குழுவில் ஓராண்டு காலம் உடனிருந்து பணியாற்றி மதுரை மாவட்டத்தில் மட்டும் 80 கிரானைட் குவாரிகளில் 1 லட்சம் 13 ஆயிரம் கோடி முறைகேடு நடந்துள்ளது என்ற அறிக்கையை முன்வைத்தாகவும், தமிழகம் முழுக்க சூழியல் பாதுகாப்புக்கான செயல்பாடுகளில் ஈடுபட்டு வருவதாகவும் தெரிவித்தார். கடந்த காலங்களில் கல்குவாரிகளுக்கு கருத்து

கேட்பு கூட்டம் கிடையாது. காரணம் 2019 ஆம் ஆண்டு வரை கல்குவாரிகளுக்கு 25 ஹெக்டேர் அதாவது 62 ஏக்கருக்கு மேல் இருந்தால்தான் கருத்து கேட்பு கூட்டம் இருந்ததாகவும். 2018 டிசம்பரில் தேசிய பசுமை தீர்ப்பாயம் ஒரு குவாரி ஒரு ஏக்கரில் அமைந்தாலும் கூட அதை சுற்றி 500 மீட்டர் பரப்பளவில் 12.5 ஏக்கர் அதாவது 5 ஹெக்டேர் நிலம் இருந்தால், அது கல்குவாரியாக இருக்கலாம், மணல் குவாரி ஆக இருக்கலாம், கிரானைட் குவாரியா இருக்கலாம், எந்த குவாரி ஆக இருந்தாலும் கருத்துக்கேட்பு கூட்டம் நடத்த வேண்டும் என்ற உத்தரவின் அடிப்படையில் இந்தக் கல்குவாரியினுடைய பரப்பளவு 4.77.0 ஹெக்டேர் இருந்தாலும் கூட இதை சுற்றி நான்கு கல்குவாரிகள் அனுமதி கேட்டு இயங்கிக் கொண்டிருக்கிறது, அனுமதி முடிந்த கல்குவாரி இரண்டு என மொத்தம் ஆறு கல்குவாரிகள் இதை சுற்றி இருப்பதால் இந்த கருத்து கேட்பு கூட்டம் நடைபெறுவதாக தெரிவித்தார். இந்த கருத்து கேட்பு கூட்டம் என்பது கல்குவாரி பொதுவாக வேண்டும் வேண்டாம் என்பதற்காக கிடையாது என்று கூறினார். இந்த கல்குவாரி இங்கே செயல்படும் போது கட்டாயம் காற்று மாசுபாடு ஏற்படும், அதேபோல் கட்டாயம் நிலத்தடி நீர் மாசுபாடு ஏற்படும், ஒலி மாசுபாடு ஏற்படும், மண் மாசுபாடு ஏற்படும், இது இல்லாமல் மனிதர்கள் மட்டுமல்லாமல் இங்கே உள்ள சிறு உயிரினங்கள், பல்லுயிர் சூழல் பாதிக்கப்படும். அதேபோல் செடி கொடிகள் எல்லாம் பாதிக்கப்படும், சமூக பொருளாதார சூழல் பாதிக்கப்படும் என்று சொல்லி தான் இந்த நிறுவனம் ஒரு 500 பக்க அறிக்கையை கொடுத்திருப்பதாக தெரிவித்தார். அந்த 500 பக்க அறிக்கையில் சாராம்சமாக ஒரு பத்து பக்கத்தினை திரையில் காண்பித்து சில விஷயங்களை சொன்னதாக குறிப்பிட்டார். ஆகவே, இவர்கள் சொல்வது இந்த கல்குவாரி இயங்குவதால் காற்று மாசு, மண் மாசு, நீர் மாசு, ஒலி மாசு, பல்லுயிர் சுழல் மாசு ஏற்படும். இதை எப்படி சரி செய்ய முடியும் என்பதை இந்த நிறுவனம் சொல்லுகிற அடிப்படையில் இது சரி செய்ய முடியுமா, இது அறிவியல் அடிப்படையில் உள்ளதா என்பதற்காக தான் இந்த கருத்து கேட்புக் கூட்டம் நடைபெறுகிறது. அதன் அடிப்படையில் தன்னுடைய கருத்துக்களை இந்த ஆய்வு அறிக்கையின் அடிப்படையில் முன்வைப்பதாக தெரிவித்தார். கல்குவாரிகளுக்கு பொதுவான அடிப்படை அரசினுடைய விதி Criteria என்று சொல்லுவார்கள். சிறு கனிம சலுகை விதிகள் 1959, இதுதான் எல்லா குவாரிகளுக்குமானது. எப்படி நீதிமன்றத்தில் இந்திய தண்டனை சட்டம் என்று அதில் புல இ.பி.கோ. (IPC) 514, 501, 502 இருப்பது போல் இந்த சிறு கனிம சலுகை விதிகள் 1959 தான் எல்லாவற்றையும் தீர்மானிப்பதாக தெரிவித்தார். இந்த விதிகளின் அடிப்படையில் தான் குவாரிக்கு அனுமதி கொடுக்கலாமா வேண்டாமா என்று தீர்மானிப்பார்கள். இந்த Criteria -விதியின் படி 300 மீட்டர் தூரத்திற்குள் வீடுகள் இருந்தால் அந்த

கல்குவாரிக்கு அனுமதி தரக்கூடாது என்று சிறு கனிம சலுகை விதிகள் 1959 பிரிவு 36-ல் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது. இங்கு வீடுகள் இருந்தால், கல்குவாரிகளுக்கு அனுமதி தரக்கூடாது. அங்கீகரிக்கப்பட்ட வீடுகளோ அல்லது ஊர் நத்தமோ அல்லது ஊராட்சி அனுமதி பெற்ற வீட்டு மனைகளோ அல்லது DTCP அனுமதி பெற்ற வீட்டு மனைகளோ 300 மீட்டர் சுற்றளவு தொலைவில் இருந்தால் அனுமதி கொடுக்கக்கூடாது. அதே மாதிரி 500 மீட்டர் சுற்றளவுத் தொலைவில் குவாரி அமைகின்ற இடத்திலிருந்து நீர் எடுக்கின்ற நிலையம், நீர் உந்து நிலையம், மேல்நிலை நீர் தேக்க தொட்டியோ இருந்தால் அனுமதி கொடுக்க கூடாது. அதேபோல் 500 மீட்டர் சுற்றளவிற்கு குளங்கள், நீர் நிலைகள் இருந்தால் அங்கு குவாரிகளுக்கு அனுமதி தரக் கூடாது என்று மாண்புமிகு உயர் நீதிமன்றம் உத்தரவிட்டிருக்கிறது. இது தான் இதில் இருக்கக்கூடிய விதி. அதே போல் குவாரிக்கு அருகில் ஏதாவது வாய்க்கால் என்று சொல்லப்படுகிற ஓடை சென்றாலோ, 50 மீட்டர் இடைவெளி விட வேண்டும். அதேபோல் மின்சார கம்பிகளோ அல்லது தொலைபேசி கம்பிகளோ அல்லது பெட்ரோலியம் குழாய்களோ சென்றால் 50 மீட்டர் இடைவெளி விட வேண்டும். மாநில நெடுஞ்சாலைகள் இருந்தால் 50 மீட்டர் இடைவெளி விட வேண்டும். வண்டிப் பாதை இருந்தால் 10 மீட்டர் இடைவெளி விட வேண்டும். இதெல்லாம் நான் சொல்லவில்லை இதுதான் சட்டம் என்று தெரிவித்தார். கடந்த காலங்களில் இது போன்ற கல்குவாரிகளுக்கு அனுமதி கொடுக்கப்பட்டது கிடையாது. இதற்கு நல்ல உதாரணம் இதே மாவட்டத்தை சேர்ந்த மெய்யபுரம் என்ற ஊரில் உள்ள குவாரிக்கு கடந்த ஆண்டு அனுமதி கொடுத்தார்கள். அந்த குவாரி விதிகளை மீறி உள்ளதாக குறிப்பிட்ட உடனேயே அந்த குவாரி உரிமையாளர்கள் நீதிமன்றத்துக்கு சென்றதாகவும் நீதிமன்றம் விதிகளின் படி இல்லை என்றால் குவாரியை நிறுத்துங்கள் என்ற உத்தரவின் படி மாவட்ட நிர்வாகம் அந்த குவாரிக்கு கொடுத்த அனுமதியை ரத்து செய்தார்கள் என்று கூறினார். தற்பொழுது கூட திருமயம் வட்டத்தில் ஒரு கல்குவாரிக்கு அனுமதி கொடுத்ததின் பேரில், அதை உயர்நீதிமன்றம் விசாரணைக்கு ஒரு விசாரணைக்குழு அனுப்பி ஆய்வு செய்ததில் 300 மீட்டருக்குள் வீடுகள் இருப்பதாக உயர்நீதி மன்ற விசாரணைக் குழு தெரிவித்ததன் பேரில் ஏற்கனவே வருவாய்த்துறை மூலம் அளிக்கப்பட்ட சான்றிதழ் தவறானது என்றும், அதனால் உயர் நீதிமன்றம் சரியான வருவாய் துறை சான்று அளிக்க வேண்டும் என்று உத்தரவிட்டு இருந்தது. இந்த அடிப்படையில் இந்த கல்குவாரியை பார்த்தால் 500 மீட்டர் தூரத்திற்குள் இரண்டு வீடுகள் அமைந்துள்ளது. இதை நான் சொல்லவில்லை, திட்ட உரிமையாளரின் வரைபடம் பக்கம் 402-ல் காட்டி இருப்பதாக குறிப்பிட்டார். 500 மீட்டர் தொலைவில் இரண்டு வீடுகள் இருப்பதாக இதில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இந்த

குவாரியின் வடகிழக்கு பகுதியில் இரண்டு வீடுகள் இருப்பதாக தெரிவித்தார். அதேபோல் 500 மீட்டர் தூரத்திற்குள் குளங்கள் இருந்தால் அனுமதி கொடுக்கக்கூடாது. இங்கே 100 மீட்டர் தூரத்திற்குள் நான்கு குளங்கள் உள்ளன. 500 மீட்டருக்குள் உள்ளேயே ஏழு குளங்கள் உள்ளன. எனவே, இந்த கல்குவாரிக்கு கட்டாயம் இங்கு சட்டப்படி, நீதிமன்ற உத்தரவுப்படி, அனுமதி கொடுக்க முடியாது. அதே போல் இந்த கல்குவாரியினுடைய வடபுற பகுதியில் ஓடை செல்வதாகவும் அதனால், அந்த வாய்க்காலுக்கு 50 மீட்டர் இடைவெளி விட்டு குவாரி பணி செய்யப்போவதாக சொல்லி இருக்கிறார்கள் என தெரிவித்தார். இந்த குவாரியினுடைய வடபுற பகுதியில் வாய்க்கால் உள்ளது. அடுத்து நடக்கப்போகின்ற கருத்துக் கேட்பு கூட்டத்தில் உள்ள குவாரிக்கு தென்புற பகுதியில் வாய்க்கால் சென்று கொண்டே இருக்கிறது. இந்த கல்குவாரி 45 மீட்டர் ஆழத்திற்கு அதாவது 155 அடி ஆழத்துக்கு கல்குவாரி சுரங்கப் பணிகள் தோண்ட அனுமதி கேட்டு இருப்பதாகவும் தெரிவித்தார். எனக்கு முன்னால் பேசிய அண்ணன் குறிப்பிட்டார், இந்த பகுதியில் 20 அடி, 30 அடி ஆழத்திலேயே தண்ணீர் கிடைத்துக்கொண்டு இருந்ததாகவும், ஆனால் தற்பொழுது அப்படி இல்லை என்று கூறியதாக குறிப்பிட்டார். 155 அடி ஆழத்தில் கல்குவாரி. நீங்க யோசிச்சு பாருங்க, 25 ஏக்கர் பரப்பளவில் 155 அடி ஆழத்தில் கல்குவாரியின் சுரங்கப் பணி செய்தால் சுற்றி ஏழு குளம். அந்த குளத்தில் இருக்கும் தண்ணீர் எல்லாம் எங்கே செல்லும்? குவாரிக்கு தான் செல்லும் என்று தெரிவித்தார். இந்த பகுதியினுடைய நிலங்கள் எல்லாம் தரிசு என்று சொல்லி கிராம நிர்வாக அலுவலர் சான்று கொடுத்திருப்பதாகவும், அதே தரிசு நிலம் என்று குறிப்பிட்ட கிராம நிர்வாக அலுவலருடைய அறிக்கை பக்கம் 300-310-ல் இது முற்போகம் விளைகிற பூமி என்று குறிப்பிட்டுள்ளதாக தெரிவித்தார். இந்த குவாரி அமைந்துள்ள சர்வே நம்பர் எல்லாம் முற்போகம் விளைகிற பூமி என்று நான் சொல்லவில்லை, அரசினுடைய ஆவணங்கள் சொல்கிறது என்று தெரிவித்தார். கல்குவாரிக்கு அனுமதி கேட்டு இருக்கும் 12 ஏக்கர் நிலம் மற்றும் அடுத்து இருக்கிற கல்குவாரியோட 12 ஏக்கர் நிலம் ஆக மொத்தம் 24 ஏக்கர் நிலமுமே முற்போகம் விளைகிற நிலம் என்று சொல்லி அரசினுடைய சிட்டாவை காண்பித்தார். மேலும், ஏன் இருபோகமில்லை, முற்போகத்திற்கு காரணம், ஏழு குளம் தான் என்று குறிப்பிட்டார். ஏழு குளம் இருப்பதினால் பனம்பட்டி வரும் வழியில் தற்பொழுது நான் பார்த்தபொழுது கோடைகாலத்தில் நெல் விளைந்திருப்பதாகவும் தெரிவித்தார். ஆனால், இப்படிப்பட்ட இந்தப் பகுதியில் கல்குவாரி அமைய வேண்டும் என்று சொல்கிறார்கள். மனிதனால் எது மீண்டும் உருவாக்க முடியுமோ அதை மனிதன் அழிப்பதற்கு தார்மீக உரிமை உண்டு. ஆனால், மனிதனால் உருவாக்க முடியாததை அழித்தால், நாம் அழிந்து விடுவோம் என்று

தெரிவித்தார். தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், பொதுப்பணித்துறையிடம் இருந்து வாங்கி ஒரு அறிக்கை கொடுத்திருப்பதாகவும், அந்த அறிக்கையில் இந்த தாலுக்காவில் அமைந்துள்ள சித்தன்னவாசல், குரு வட்டம் மதியநல்லூர் Safer Zone அதாவது 70% மேல் தண்ணீர் இருப்பதை ஆவணமாக கொடுத்து இருப்பதாக குறிப்பிட்டார். இதே போல் புதுக்கோட்டை மாவட்டத்தில் மணல்மேல்குடி, பெருமருதூர், கோட்டைப்பட்டினம், சிங்கவனம் போன்ற பகுதியில் எல்லாம் கடல் நீர் ஊடுருவி விட்டதாகவும், அதனால் அந்த பகுதியில் உள்ள நீர் உவர்ப்பு தன்மை உள்ளதாக குறிப்பிட்டார். இந்தப் பகுதி நன்றாக இருப்பதாகவும் கடலோரத்தை ஒட்டி இருக்கும் மாவட்டம் புதுக்கோட்டை மாவட்டம் அதனால், கல்குவாரிக்காக 175 அடி, 200 அடி, 300 அடி ஆழத்திற்கு சுரங்கப் பணிகள் மேற்கொண்டால் இந்தப் பகுதியிலும் கடல் நீர் ஊடுருவிவிடும் என்று குறிப்பிட்டார். தூத்துக்குடி மாவட்டத்தில், 12 ஒன்றியங்களில், 4 ஒன்றியங்களான திருச்செந்தூர், ஸ்ரீவைகுண்டம், ஆழ்வார் திருநகரி, விளாத்திக்குளம் இந்த நான்கு பகுதியும் தாமிரபரணி ஆறு ஓடுவதால் அந்தப் பகுதி மட்டும் தண்ணீர் நன்றாக இருப்பதாகவும். மற்ற எல்லா இடங்களிலும் கடல் நீர் உட்புகுந்து விட்டதாகவும், அதை அரசு அறிக்கையாக கொடுத்திருப்பதாக தெரிவித்தார். அதனால் நான் இங்கு இது வெறும் கல்குவாரி அமைவதற்காக மட்டும் பேசவில்லை என்றும், நம்முடைய எதிர்கால சந்ததி எப்படி எல்லாம் இங்கே வாழ போகிறது, எதிர்கால சந்ததி வாழ முடியுமா, என்பதைப் பற்றி தான் மிக முக்கியமாக பேசுவதாக குறிப்பிட்டார். இன்றைக்கெல்லாம் குழந்தைகள் பள்ளிக்கூடத்திற்கு சென்றிருக்க வேண்டிய நேரம். ஆனால், 15 நாட்கள் பள்ளிக்கூடத்திற்கு விடுமுறை விட்டார்கள். ஏனென்றால், வெயிலின் வெப்பம் $110^0$ பாரன்ஹீட் மேல் அடிப்பதாகவும் தெரிவித்தார். மேலும், தமிழ்நாட்டில் அதிகமான வெப்பம் வேலூரில் தான் இருந்ததாகவும், ஆனால் தற்பொழுது புதுக்கோட்டை, கரூர், திருப்பூர், ஈரோடு போன்ற பகுதியில் 110 டிகிரி பாரன்ஹீட் வெயில் அடிப்பதாகவும் குறிப்பிட்டார். இங்கே அளவுக்கு அதிகமாக நிலத்தை தோண்டியதால் வெப்பம் அதிகமாக இருப்பதாகவும், அதனால் குழந்தைகளை பள்ளிக்கூடத்துக்கு அனுப்ப முடியவில்லை என்று தெரிவித்தார். கொரோனா பெருந்தொற்று காலத்தில் எவ்வாறு குழந்தைகளை பள்ளிக்கு அனுப்ப முடியாமல் போனதோ. அதேபோன்று இப்பொழுதும் அனுப்ப முடியாமல் போவதாக குறிப்பிட்டார். இந்த கல் இல்லாமல் நாம் வாழ்ந்திடலாம். இந்த நோயுடனும், இந்த வெப்பத்துடனும் நம் எதிர்கால சந்ததியினர் எப்படி வாழ முடியுமா என்று நாம் யோசித்துப் பார்க்க வேண்டிய தருணம் இது என்று தெரிவித்தார். இதில் குறிப்பாக ஏழு குளம் அமைந்திருக்கிறது. வடபுறத்தில் வாய்க்கால் அமைந்திருக்கிறது. தனியாக இந்த கல்குவாரிக்கு வடபுறம் செல்லக்கூடிய வாய்க்கால் கிட்டத்தட்ட 145 அடி

ஆழத்திற்கு கல்குவாரி தோண்டும் பொழுது அந்த வாய்க்கால் தானாக காணாமல் போய்விடும் என்றும், அந்த வாய்க்கால் மூலம் தண்ணீர் செல்லக்கூடிய பாசனம் எல்லாம் அழிந்து போய்விடும் என்று தெரிவித்தார். அரசு மற்றும் பொதுப்பணித்துறை அறிக்கையில் இங்கு தண்ணீர் மட்டம் மேலே இருப்பதாக கூறியுள்ளார்கள். ஆனால் இந்த நிறுவனம் 70 மீட்டர் கிட்டத்தட்ட 240 அடி கீழேதான் தண்ணீர் மட்டம் இருப்பதாகவும் அது மட்டுமில்லாமல் மழைக்காலத்தில் 240 அடி கீழேயும் வெயில் காலத்தில் 265 அடி கீழேயும் தண்ணீர் மட்டம் இருப்பதாக சொல்வதாகவும், ஆனால் அரசினுடைய அறிக்கையில் வேறுபட்டு இருப்பதாக குறிப்பிட்டார். நாங்கள் தொடர்ச்சியாக வலியுறுத்தும் விஷயம் என்னவென்றால், இந்த கருத்துக்கேட்பு கூட்டத்திற்கு அறிக்கை தயாரிக்கும் நிறுவனம் மற்றும் அதிகாரிகளும் தயவுசெய்து எல்லா ஆவணங்களையும் வைக்க வேண்டும் எனவும், இந்த திட்ட அறிக்கையில் பார்த்தால் சுரங்க திட்ட அறிக்கை இருப்பதாகவும் அதில் FMB Sketch மற்றும் வரைபட ஆவணங்கள் வைத்திருப்பதாகவும் கிராம நிர்வாக அலுவலரின் சான்று இல்லை என்று குறிப்பிட்டார். கிராம நிர்வாக அலுவலர் சான்று அளிக்கும் பொழுது உண்மையான சான்று அளிக்க வேண்டும். திட்ட அறிக்கையில் அனைத்து ஆவணங்களும் இணைக்கப்பட வேண்டும். கரூர் மாவட்டத்தில், ஒரு இடத்தில் ஒரு கிராம நிர்வாக அலுவலர் பொய்யான சான்று அளித்து இருந்ததாகவும் தற்பொழுது அவர் மீது FIR போட்டு உள்ளதாகவும் குறிப்பிட்டார். பல்லடத்தில் நந்தகுமார் என்று ஒரு வட்டாட்சியர் இது போன்ற பொய்யான அறிக்கை கொடுத்து இருப்பதாகவும் அவர் மீது தற்பொழுது வழக்கு பதிவு செய்யப்பட்டு உள்ளதாக தெரிவித்தார். கடந்த காலங்களில் தமிழ்நாட்டில் இருக்கின்ற ஒன்பதாயிரம் கல்குவாரி உட்பட 12,000 குவாரிகளுமே விதிகளை மீறி பொய்யாக தான் அனுமதி கொடுத்து இருப்பதாக தெரிவித்தார். நாங்கள் கடந்த சித்தன்னவாசல் மற்றும் லெம்பலக்குடியில் நடந்த கூட்டத்தில் சொன்னதாகவும் அதில் அரசு அதிகாரிகள் கொடுக்கின்ற ஆவணம் மற்றும் நிறுவனம் கொடுக்கின்ற ஆவணமும் கிராம நிர்வாக அலுவலரின் அறிக்கையையும் எங்களுக்கு அளிக்க வேண்டும், அப்பொழுதுதான் கிராம நிர்வாக அலுவலர் மேல் புகார் பதிவு செய்ய முடியும் என்று சொன்னதாக குறிப்பிட்டார். அதன்படி ஆவணங்களை இணைத்து இருப்பார்கள் என்று பார்த்தால் அதில் கிராம நிர்வாக அலுவலரின் அறிக்கை இல்லை, வட்டாட்சியர் அறிக்கையில்லை, கோட்டாட்சியரின் அறிக்கை இல்லை தற்பொழுது எவ்வாறு புகார் சொல்ல முடியும் என்று வினாவினார். மேலும் அரசு அதிகாரிகள் உண்மையை சொல்லி இருக்கிறார்களா அல்லது பொய் அறிக்கையை அளித்திருக்கிறார்களா என்று கேள்வி எழுப்பினார். அறிக்கையில் இருந்தால் தானே அதெல்லாம் தெரிந்து கொள்ள இயலும். இவற்றையெல்லாம் இந்த

அறிக்கையில் வைக்க வேண்டும் என்று சட்டம் சொல்கிறது. ஆனால் இந்த அறிக்கையில் அதெல்லாம் இல்லை என்று குறிப்பிட்டார். இந்த கூட்டமே சென்ற 23.8.2022-ல் நடத்தப்படுவதாக அறிவிக்கப்பட்டு 11 மணிக்கு நாங்கள் எல்லாம் வந்த பின்பு 11.30 மணிக்கு கூட்டம் ரத்துன்னு காரணம் எதுவும் சொல்லாமல் அறிவித்துவிட்டு சென்றுவிட்டதாகவும், பின்பு கேட்டால் இந்த சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை தமிழில் இல்லாததனால் கூட்டம் ரத்தானதாக வாய் வழியாக சொன்னதாக குறிப்பிட்டார். நாங்கள் பேசுவது ஒரு நிறுவனம் இங்கே வருகிறபோது என்னென்ன பாதிப்புகள் எல்லாம் வரும், அந்த பாதிப்புகளை சரி செய்வதற்கு சரியான ஆவணங்கள் இருக்க வேண்டும் என்று தெரிவித்தார். இங்கு உலகத்தினுடைய அதிசயம், உலகத்தினுடைய அற்புதம், தமிழர் பண்பாட்டின் உயரிய வடிவம், சித்தன்னவாசல் இருக்கிறது. அந்த குவாரியிலிருந்து ஒரு கிலோமீட்டர் தொலைவில் தான் உள்ளது. ஆனால் அந்த சித்தன்னவாசல் பற்றி இந்த அறிக்கையில் எங்குமே குறிப்பிட்டு சொல்லவே இல்லை என்று குறிப்பிட்டார். மேலும், கல்குவாரி அமைவதற்கு 300 மீட்டர் தூரத்திற்குள் தொல்லியல் சின்னங்கள் எதுவும் இருந்தால் குவாரிக்கு அனுமதி அளிக்க கூடாது என்று விதி இருப்பதாக தெரிவித்தார். இந்த குவாரி அனுமதி வாங்கிய காலத்தில் 500 மீட்டர் வைத்திருந்தார்கள். தொல்லியல் என்று சொல்லும் போது அது அனைவருக்கும் பொதுவானது. ஆனால், குடைவரை கோவில்களை பொறுத்தவரை அது மிகவும் நுட்பமானது. இது குடைவரை கோயில் மட்டுமல்ல இது அஜந்தா எல்லோரா போல் வண்ணம் தீட்டப்பட்ட குடைவரைக் கோயில் ஆகும். வெடி வைக்கும் பொழுது ஏற்படுகிற நில அதிர்வுகளால் அந்த வண்ணம் விழுந்து விடும் என்றும் இந்த வண்ணத்தை பூசுவதற்கு இன்றைக்கு தமிழ்நாட்டில் ஏன் இந்தியாவிலேயே, ஏன் இந்த உலகத்திலேயே யாராவது இருக்கிறாங்களா என்று பார்த்தால் யாருமே கிடையாது என்று குறிப்பிட்டார். நம்முடைய பெருமை நம்முடைய பண்பாடு அதைப் பற்றிய ஒரு வார்த்தை கூட இந்த அறிக்கையில் இல்லை. இந்த குவாரி அமைக்கப் போகிறோம். குவாரி அமைத்து காலை ஏழு மணியிலிருந்து ஐந்து மணி வரைக்கும் தான் இயக்குவோம், மதியம் ஒரு மணியிலிருந்து இரண்டு மணிக்குள் வெடி வைப்போம். அதுவும் நாணல் வெடி தான் வைப்போம் என்று சொல்லியிருப்பதாக தெரிவித்தார். நாணல்வெடி என்றால் சத்தமே வெளியில் தெரியாமல் கொள்ளு பட்டாசு மாதிரி டுப் டுப் டுப்புனு வெடிக்கிற மாதிரி ஒரு வெடியை வெடிப்போம் என்றும் தினமும் ஒரு நாளைக்கு ஒரு லோடு கல் எடுப்போம், என்று அறிக்கையில் சொல்லி இருப்பதாக தெரிவித்தார். நடைமுறையில் இது எங்கேயாவது பின்பற்றப்படுகிறதா? நம்ம மாவட்டத்தில் எங்கேயும் கிடையாது. அப்போ இவற்றை சொல்லக்கூடியவர்கள் செய்யக்கூடியவர்களா, மாலை ஐந்து

மணிககு மேல் எந்த ஒரு குவாரியும் இயங்குவது கிடையாது. குவாரிக்குள்ளேயே இருந்து லோடு ஏற்றக்கூடாது. அதுதான் சட்டம். இன்றைக்கு கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியர், திருப்பூர், கோவை மாவட்ட ஆட்சியர்கள் உரிய நடவடிக்கைகள் எடுத்து, எந்த ஒரு கிராமப்புற சாலைகளிலும், உள்ளாட்சி சாலைகளிலும் 20 டன் எடைக்கு மேலே எந்த லாரியும் போகக்கூடாது, ஆறு டயர் கொண்ட லாரி அதன் எடையோடு 6 யூனிட் தான் கொண்டு போக வேண்டும் என்று சொல்லி இருப்பதாகவும், அப்படி எடுத்து சென்றால் அதனுடைய எடை 18 டன் தான் வரும். ஆனால், இங்கே போறது எல்லாம் 16, 17, 18 வீல் கொண்ட லாரிகள் எனவும். ஏற்கனவே இங்கே நான்கு குவாரிகள் இயக்கினதாக இந்த அறிக்கையில் சொல்லி இருக்காங்க. அதனுடைய விளைவாக சாலையைப் பார்த்தோம்னா நடந்து கூட போக முடியாது. இதுல எப்படி குழந்தைங்க போகும், பஸ் போகும்? என்று கேள்வி எழுப்பினார். தற்பொழுது நீதிமன்ற உத்தரவு படி ஒரு குவாரியிலிருந்து லோடு ஏற்றி செல்ல சாலை வேண்டும் என்றால் குவாரி உரிமையாளரே சாலை அமைத்துக்கொள்ள வேண்டும் என்று உத்தரவு உள்ளது. உதாரணத்திற்கு ஒரு கிலோமீட்டர் ரோடு போடவேண்டும் என்றால் கிட்டத்தட்ட 50 லட்சத்திலிருந்து ஒரு கோடி ரூபாய் வரைக்கும் செலவாகும் அரசுக்கு 50 லட்சத்திலிருந்து ஒரு கோடி ரூபாய் வரைக்கும் செலவாகும். ஆனால் இந்த குவாரி நிர்வாகம் 5 லட்சம் ரூபாய் ஊராட்சிக்கு தருவதாகவும், ஐந்து வருடத்திற்கு இரண்டு குவாரியும் சேர்த்து 10 லட்சம் தான் தருவதாக சொல்லி இருக்கிறது. ஆனால், இந்த 10 லட்சம் ரூபாயை வைத்து அரை கிலோ மீட்டர் தூரம் கூட சாலை அமைக்க முடியாது என்று தெரிவித்தார். தலைவர்கள் இருக்காங்க, ஒன்றிய குழு உறுப்பினர்கள் இருக்காங்க. இந்த விஷயத்தை நாம் இதை புரிந்து கொள்ள வேண்டும். இவர்கள் சொல்லக்கூடிய வளர்ச்சி உண்மையிலேயே யாருக்கான வளர்ச்சி? மக்களுக்கான வளர்ச்சியா? தனிப்பட்ட நபர்களுக்கான வளர்ச்சியா? யாருக்காக பயன்படுகிறது என்று வினாவினார். இரண்டரை சதவீதம் CSR தொகை கொடுக்குறாங்க. நாம சாப்பிடற சாப்பாடு, வாங்குற அரிசி, வாங்கற தீப்பெட்டி, சோப்பு, இவற்றிற்கெல்லாம் 18% நம்ம ஜிஎஸ்டி வரி கட்டுகிறோம். நாம ஒரு நாளைக்கு குடும்பத்துக்கு 10,000 செலவு பண்றானா அரசாங்கத்துக்கு ஜிஎஸ்டி வரி மட்டுமே 1800 கட்டறோம். இது இல்லாம கிட்டத்தட்ட ₹4000 வரியா மட்டும் ஒரு குடும்பத்தில் இருந்து கட்டிக்கொண்டு இருக்கிறோம். ஆனால் குவாரிகாரர் ஐந்து வருஷத்துக்கு சேர்த்து ஐந்து லட்ச ரூபாய் மட்டுமே பஞ்சாயத்திற்கு கொடுப்பதை மிகப்பெரிய விஷயமாக சொல்கிறார்கள். ஹோட்டலில் போய் நூறு ரூபாய்க்கு சாப்பிட்டா ₹18 வரி. இன்றைக்கு இதுதான் நிலைமை. அப்ப மக்கள் கிட்ட வசூலிக்கும் வரியெல்லாம் கணக்கே இல்லை. இந்த நிறுவனம் கட்டும் வரி மட்டும் தான் கணக்கா என்ற உண்மையை புரிஞ்சுக்க

வேண்டும். நாங்க குவாரிக்கு எதிரானவர்கள் அல்ல, குவாரி விதிமுறைப்படி இருந்தால் எங்களுக்கு எவ்வித மாற்று கருத்தும் இல்லை. ஆனால் இங்கே தமிழகத்தில் குறிப்பாக புதுக்கோட்டை மாவட்டத்தில் அப்படி குவாரிகள் நேர்மையாக விதிமுறைப்படி இல்லை என்பதுதான் உண்மை என்று தெரிவித்தார். அதற்காக சில உதாரணங்களை நான் இங்கு சொல்கிறேன். இந்த மெய்யபுரம் நிகழ்வு இப்போது உயர்நீதிமன்றத்தில் நடக்கிறது. போன ஆறு மாதத்துக்கு முன்னாடி நார்த்தாமலையில் அனுமதி முடிந்து இயங்கிக்கொண்டு இருந்த குவாரியை நிறுத்தினது. ஏற்கனவே சிபிஐ ரைடு வந்த குவாரி என எல்லாம் இருக்கிறது. அப்போ நாம புரிந்து கொள்ள வேண்டியது என்னவென்றால் இந்த குவாரிகளால் மக்களுக்கு என்ன நலன் என்பது தான், மேலும் இதற்கு முன்பு பேசியவர்கள் இந்த மக்களுக்கு எல்லாம் வேலை வாய்ப்பு கிடைப்பதாகவும் பனம்பட்டியிலிருந்து பக்கத்து கிராமத்துக்கெல்லாம் வேலைக்கு செல்கிறார்கள் என்று கூறியதாக தெரிவித்தார். குவாரி உரிமையாளர் சொன்ன அறிக்கையின் படி நாங்கள் குவாரியில் வேலை பார்க்கின்ற தொழிலாளர்களுக்கு காப்பீடு போடுவோம், குவாரியில் வேலை பார்க்கும் தொழிலாளர்களுக்கு இஎஸ்ஐ மருத்துவ வசதி செய்து தருவோம், குவாரியில் வேலை பார்க்கின்ற தொழிலாளர்களுக்கு பொது சேமநலநிதி செய்து தருவதாக கூறுகிறார்கள். ஆனால் தொழிலாளர் நலத்துறையில் தகவல் அறியும் உரிமைச் சட்ட மனு அளித்து பார்த்ததில் எந்த குவாரி உரிமையாளரும் புதுக்கோட்டையில் இதெல்லாம் செய்து இருக்கிறார்களா என்று தகவல்கள் கேட்டால் எந்த ஒரு குவாரி உரிமையாளர் கூட செய்யவில்லை. எல்லாமே அத்துக்கூலி மட்டும் தான். யாருக்கும் பிஎ்ஃப் கிடையாது, யாருக்கும் இஎஸ்ஐ கிடையாது, யாருக்கும் காப்பீடு கிடையாது, கை, கால் போனதுன்னா ஐயாயிரம், பத்தாயிரம் கொடுத்து மருத்துவ செலவு செய்து சரிசெய்து விடுவது தானே தவிர வேறு எதுவும் செய்யவில்லை. இது தான் உண்மையான நிலை என்பதை நான் சுட்டி காட்டுகிறேன் என்று தெரிவித்தார். அதை போல் நேற்று முன்தினம் தமிழகத்தினுடைய தலைமைச் செயலாளர் ஒரு புதிய துறையை உருவாக்கி உள்ளார். ஏற்கனவே போக்குவரத்து துறையின் கூடுதல் செயலாளராக இருந்த மரியாதைக்குரிய மகேந்திர ரெட்டி, இ.ஆ.ப., அவர்களை இயற்கை வளம் என்ற ஒரு துறையை கூடுதலாக கவனிக்கின்ற வகையில் உருவாக்கி இருக்கின்றனர். ஏன் உருவாக்கி இருக்காங்க, தமிழக அரசு காலநிலை மாற்றத்திற்கான ஒரு குழுவை அமைத்து சர்வதேச நிபுணர்கள், இந்திய அளவிலான நிபுணர்கள், தமிழக அளவிலான நிபுணர்களை எல்லாம் அமைத்து இந்த மாவட்டத்தில் இருக்கக்கூடிய மாண்புமிகு சிவ.வீ.மெய்யநாதன், சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் அவர்களுடைய பொறுப்பில் அந்த காலநிலை மாற்றத்திற்கான அமைச்சகத்தை

அமைத்து இயங்கிக் கொண்டிருக்கிறது. இங்கே பூமியில் வெப்பம் மிகவும் அதிகமாகிக் கொண்டிருக்கிறது. அதனால், இங்கு 15 நாளில் பள்ளிக்கூடம் திறக்கவில்லை என்ற சொல்லுகிறோம், அடுத்த 15 நாள் இன்னும் வெப்பம் குறையாமல் இருக்கும் பட்சத்தில் எங்கே போவோம் என்று தெரியாது என்று தெரிவித்தார். ஏற்கனவே ஐயா நம்மாழ்வார் புதுக்கோட்டை, கீரனூரில் இருந்து தான் பொது சேவை செய்தார். அவர் தான் சொன்னார் இந்த இயற்கையை நாம் மீண்டும் மறு உருவாக்கம் செய்யக்கூடிய வகையில் தான் பயன்படுத்த வேண்டுமே ஒழிய இதை அழிக்கக் கூடிய வகையில் செய்தோம் என்றால் இங்கு பருவ மழை பெய்யாது. இங்கு வெயிலும் அடிக்க வேண்டிய காலத்தில் வெயில் வராது, கொரோனா போன்ற கணக்கில் வராத நோய்கள் எல்லாம் வரும். இன்றைக்கு அப்படிப்பட்ட நிலையில் தான் நாம் இருந்து கொண்டு இருக்கிறோம். அதன் அபாயத்தினை நாம் பார்க்கின்றோம். எனவே, வருங்காலத்தில் அடுத்து 15 நாளில் லெம்பலக்குடியில் ஒரு கருத்துக்கணிப்பு கூட்டம் நடக்கயிருக்கிறது. அந்த கருத்து கேட்பு கூட்டத்திற்கான அறிக்கையில் கூடுதலாக வருவாய்த்துறை, தொல்லியல் துறை, வனத்துறை, பொதுப்பணித்துறை, மின்சாரவாரியம் மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலர் அறிக்கை எல்லாம் இத்துடன் இணைத்து வைக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார். அடுத்து பசுமை வளையம் அமைப்பதாக சொல்லி இந்த குவாரி 790 மரங்களை ஐந்து வருடத்தில் நடப்போவதாக கூறியுள்ளார்கள், அதில் 630 மரங்கள் உயிர் பிழைத்து வந்துவிடும் என்று கூறியுள்ளார்கள். நடைமுறையில் பார்த்தோம் என்றால் எந்த கல்குவாரியிலும் பசுமை வளையம் அமைப்பதில்லை. எல்லாம் அழகாக அந்த அறிக்கையில் வார்த்தைகளில் இருப்பதாகவும் ஆனால் நடைமுறையில் இல்லை என்றும், சர்க்கரை என்று சொல்லிவிட்டால் மட்டும் இனிக்காது என்று குறிப்பிட்டார். தமிழ்நாட்டில் இயங்கிய கல்குவாரிகள், இயங்கிக் கொண்டிருக்கும் கல்குவாரிகள் எல்லாம் மரங்களை சொன்ன அடிப்படையில் நட்டு இருந்தால் தமிழ்நாட்டில் நான்கு கோடி ஐந்து கோடி மரம் வைத்திருப்பார்கள். ஆனால் அரசாங்கம் நம்முடைய வரிப்பணத்தை எடுத்து இன்றைக்கு மரம் நடும் விழா நடத்திக் கொண்டிருக்கிறது என்று கூறினார். குவாரி உரிமையாளர்கள் கோடி கோடியா சம்பாதித்தாலும், மரம் நடுவதை செய்வது இல்லை என்று குறிப்பிட்டார். எனவே, பசுமை வளையம் அமைப்பதை மாவட்ட நிர்வாகம் கட்டாயம் உறுதிப்படுத்தி, பசுமை வளையம் அமைக்காத குவாரியின் உரிமத்தை தற்காலிகமாக ரத்து செய்ய வேண்டும் என்று குறிப்பிட்டார். திருப்பூர் மாவட்ட ஆட்சியர் வினித் அவர்கள் கோடாங்கிபாளையத்தில் ராமகிருஷ்ணா என்ற கல்குவாரியை பசுமை வளையம் அமைக்கவில்லை என்ற காரணத்திற்காக அனுமதியை ரத்து செய்துள்ளார். அதிகாரிகள் அப்படி செய்ய வேண்டும், அதுக்கு

உங்களுக்கு எல்லா அதிகாரமும் இருக்கிறது. அதிகாரத்தை பயன்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொண்டார். இன்றைக்கு மக்கள் விழிப்புணர்வு பெற்று இருப்பதாகவும் கடந்த காலம் மாதிரி இல்லை எனவும், எதை சொன்னாலும் அப்படியே ஏற்றுக்கொண்டு போகமாட்டார்கள் எனவும். அதற்கான விழிப்புணர்வு வேலைகளை செய்து கொண்டு இருப்பதாகவும் தெரிவித்தார். இதற்காக எங்களது கூட்டணி விவசாயி ஜெகநாதன் என்பவர் கரூரில் கல்குவாரி உரிமையாளரால் லாரி ஏற்றிக் கொல்லப்பட்டார். இன்றைக்கு வரைக்கும் அந்த உரிமையாளர் குண்டர் சட்டத்தில் சிறையில் இருப்பதாக தெரிவித்தார். இப்படி உயிரை கொடுத்து, நாங்கள் இங்கே வந்து பேசிக்கொண்டு இருப்பது எல்லாம் ஏதோ வாய்மொழி தேவை இல்லை மக்கள் விழிப்புணர்வாக இருக்க வேண்டும். குறிப்பாக பனம்பட்டி, பெருஞ்சுனை, சித்தன்னவாசல் காக்கப்பட வேண்டும். இந்த பகுதியில் இருக்கக்கூடிய சித்தன்னவாசல் உங்கள் தலைமுறையை மட்டும் அல்ல உங்களுக்கு அப்புறம் ஒரு 100 தலைமுறையை கடந்து சென்றாலும் அதனுடைய வரலாற்றை அது பேச வேண்டும். அதனால், அதை பாதுகாக்க வேண்டியது நம் ஒவ்வொருவரின் கடமை என்று குறிப்பிட்டார். தமிழில் பேசுவது மட்டுமல்ல தமிழ் பண்பாட்டை பேசுவதில்லை, ஜல்லிக்கட்டை பேசுவதில்லை, நம்முடைய மரபை, பண்பாடுகளை, பாதுகாக்க வேண்டியது ஒவ்வொரு மக்களுடைய அடிப்படை கடமை. இந்த நிறுவனம் இப்படி ஒரு சித்தன்னவாசல் இருக்கிறதையே இந்த அறிக்கையில் காட்டவில்லை. எனவே, இந்த மாவட்ட நிர்வாகம் நாங்கள் சொன்னதை எல்லாம் கவனத்தில் எடுத்துக் கொண்டு இந்த கல்குவாரி சட்டப்படி இயங்குவதற்கு எந்தவித தகுதியும் இல்லை என குறிப்பிட்டார். தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் தொழில் முனைவோருக்கான கையேட்டிலேயே சுற்றுச்சூழல் அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விபரங்கள் என்னுடைய அறிவுக்கு எட்டிய வகையிலும் நான் நன்கு அறிந்த வகையிலும், மேற்காணும் புள்ளி விவரங்களும் தகவல்களும் உண்மை என்று இதன் மூலம் உறுதி அளிக்கிறேன். அளிக்கப்படும் தகவல்கள் புள்ளி விவரங்கள் ஏதேனும் எந்த நிலையிலாவது ஒரு பகுதி பொய்யானாலும் அல்லது தவறாக இருப்பினும் திட்டம் நிராகரிக்கப்படும் என்றும் திட்டம் அனுமதி ஏதேனும் வழங்கப்பட்டு இருப்பின் அது எங்களது பொறுப்பிலும் செலவிலும் திரும்பத் பெறப்படும் என்றும் நான் நன்கு அறிவேன் என்று தான் இந்த குவாரி உரிமையாளர் Affitavit தாக்கல் செய்துள்ளார். எனவே, இந்த அடிப்படையில் இந்த குவாரி நடத்தக்கூடிய நிறுவனம் கொடுத்து இருக்கக்கூடிய அறிக்கை உண்மையை அறிவதற்கான வடிவில் இல்லை, அரசு துறையை சார்ந்த யாருடைய அறிக்கையும் இணைக்கப்படவில்லை. கொடுக்கப்பட்ட விபரங்கள் பல பொய்யானதாக, திசை திருப்பும் விதமாக கொடுக்கப்பட்டிருக்கிறது. எனவே, இந்த கல்குவாரிக்கு

அனுமதி கொடுக்கக் கூடாது. சித்தன்னவாசலை காப்போம், பனம்பட்டி, பெருஞ்சுனையை காப்போம், புதுக்கோட்டையை காப்போம், தமிழர் மரபையும், தமிழர் பண்பாட்டையும், தமிழ் தேசிய இனத்துடைய சிறப்பை பாதுகாப்போம். என்று கூறி தனது எதிர்ப்பு கருத்தினை பதிவு செய்தார்.

10. திரு. MC. மனோகரன், சமூக ஆர்வலர், மருதான்தலை

கருத்து கேட்பு கூட்டத்திற்கு வருகை தந்திருக்கும் இலுப்பூர் கோட்டாட்சியர், இலுப்பூர் வட்டாட்சியர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரிய அதிகாரி அவர்களுக்கும் மற்றும் அனைவருக்கும் வணக்கத்தை தெரிவித்துக் கொண்டு இது அரசியல் மேடை இல்லை, அரசு கவனத்திற்கு கருத்து கேட்பு கூட்டம் நடைபெறுகிறது. எனவே, ஒரு சில கருத்துக்களை மட்டும் இங்கே நான் பதிவு செய்கிறேன் என்று கூறினார். நாங்கள் நேற்று கூட மரங்களை நட்டதாகவும், அமைச்சரை வைத்து மரம் நட திட்டமிட்டுள்ளதாகவும் தெரிவித்தார். இங்கே பேசியவர்கள் இங்குள்ள மக்களின் வாழ்வாதாரத்தை பற்றி சிந்திக்க வேண்டும். வாய் கிழிய பேசிவிட்டு போய்விடுவார்கள். ஆனால், இங்கே கல்வி, பொருளாதாரம், வாழ்வாதாரம் அனைத்தும் கிடைக்க வேண்டும். பொதுமக்கள் தினசரி வருமானத்தை தேடிக்கொள்ள இதுபோன்ற கல்குவாரி அவசியமானது. பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டம் நடைபெறுகிறது, இங்கு இருப்பவர்கள் எல்லாம் வெளியூர் கிடையாது பேசிவிட்டு செல்பவர்கள் அல்ல. நாளைக்கே ஏதோ ஒன்று ஏற்பட்டாலும் நாங்கள் வந்து நிற்போம் என்று கூறினார். நாங்கள் மேல் அவை நீதிமன்றம் மற்றும் கீழ் அவை நீதிமன்றம் எல்லாவற்றிற்கும் சென்று கொண்டிருக்கிறோம். இப்போதுள்ள பொதுமக்கள் எல்லாம் தெளிவாக உள்ளனர் பேருந்து வரவில்லை என்றாலும், தண்ணீர் வரவில்லை என்றாலும் சாலை மறியல் செய்துவிடுகிறார்கள். நீங்கள் சொல்லி தான் தெரிய வேண்டும் என்பது இல்லை. இந்த பனம்பட்டி ஊராட்சிக்கு அருகில் உள்ள மேலூர் ஊராட்சி அங்கு உள்ள கல் குவாரி மூலம் கிடைக்கும் வருவாயை கொண்டு சுமார் ஐந்து கோடி மதிப்பில் எண்ணற்ற வேலைகள் அந்த ஊராட்சியில் நடந்து கொண்டிருக்கின்றன. ஊராட்சி மேம்பட்டு கொண்டிருக்கிறது. ஆனால் இடையில் மாட்டிக் கொணடு முழிப்பது இந்த பனம்பட்டி ஊராட்சி மட்டுமே. இந்த ஊரில் உள்ள மக்கள் பிழைக்க வேண்டும். இங்கு யாரிடமாவது நூறு ரூபாய் கேட்டால் கொடுப்பார்களா என்றால் கொடுக்க மாட்டார்கள். உழைத்தால் தான் சாப்பிட முடியும். நமக்கான வாழ்வாதாரத்தை நாம்தான் தேடிக்கொள்ள வேண்டும். இங்குள்ள தாய்மார்கள் தெளிவாக இருக்கின்றார்கள். நாங்கள் கஜா புயல் மற்றும் கொரோனா போன்ற பேரிடர் காலத்தில் பல தொண்டு நிறுவனங்களின் மூலம் பல ஊர்களுக்கு உதவி செய்தோம்.

அதேபோன்று இந்த கருத்து கேட்பு கூட்டத்திற்கு வரும் பொழுது இங்குள்ள பொது மக்களிடம் இந்த குவாரி அமைவதால் உங்களுக்கு ஏதும் பாதிப்பு ஏற்படுமா என்று கேட்ட பொழுது. எந்த பாதிப்பு இல்லை என்றும், இந்த குவாரி அமைவதால் எங்களுக்கு வேலை வாய்ப்பு பல பேருக்கு கிடைக்கும் என்று தான் பொதுமக்கள் கூறியதாக தெரிவித்தார். இதற்கு முன்பு ஒன்றிய கவுன்சிலர் பேசினார். அவர்கள் எல்லாம் உள்ளூர்காரர்கள் மற்றவர்கள் எல்லாம் வெளியூர் காரர்கள் பேசிவிட்டு சென்று விடுவார்கள். இந்த ஊராட்சி முன்னேற வேண்டும், மக்கள் வாழ்வாதாரம் பெருக வேண்டுமென்றால் இந்தக் கல்குவாரி அமைவதால் மட்டுமே முடியும் என்றும் அதனால் எங்களுக்கு எவ்வித ஆட்சேபனையும் இல்லை என்று குறிப்பிட்டார். மேலும், இந்த பனம்பட்டி ஊராட்சி மேம்பட வேண்டும் என்றால், இந்த கல்குவாரி எங்களுக்கு அவசியம் வேண்டும் என்று வாய்ப்புக்கு நன்றி கூறி தனது ஆதரவு கருத்தினை பதிவு செய்தார்.

## 11. திரு. கர்ணன், பிரான்மலை, சிங்கம்புரம்

இந்த பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்திற்கு வந்திருக்கும் அனைவருக்கும் வணக்கத்தினை தெரிவித்துக்கொண்டு எங்களது ஊருக்கு அருகில் உள்ள குடுமியான்மலை குகை கோவில் அனைவருக்கும் தெரியும். அந்தக் குகை கோயிலில் பாறைகளில் விரிசல் அடைந்துள்ளது எதனால் அந்த விரிசல் ஏற்பட்டது என்பதை அதிகாரிகள் ஆராயும் பொழுது அதன் அருகில் ஒன்றரை கிலோ மீட்டர் தொலைவில் உள்ள கல்குவாரிகள் தான் காரணம் என்பதால் அதை மூடி விட்டார்கள் என்று தெரிவித்தார். அதேபோல் நமது சித்தன்னவாசலில் ஓவியங்கள் உள்ளன அதை பாதுகாப்பது நமது கடமை. இந்த கல்குவாரியால் சித்தன்னவாசலில் உள்ள ஓவியங்களுக்கு ஆபத்து. ஆகையால், இந்த கல்குவாரியை தடுத்து நிறுத்த வேண்டும் என்பது எங்களது வேண்டுகோள் என்று குறிப்பிட்டார். அதேபோல் எங்களது தோழர் முகிலன் பல்வேறு புகார்களை சொல்லி இருக்கிறார். இது ஒரு சட்ட விரோத கல்குவாரி ஆகையால், இந்த கல்குவாரிக்கு அனுமதி அளிக்கக் கூடாது என்று கேட்டுக்கொள்வதாக தெரிவித்துக் கொண்டு தனது எதிர்ப்பு கருத்தினை பதிவு செய்தார்.

## 12.திரு. சிவக்குமார், கீரனூர்

இந்த பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்திற்கு வந்துள்ள இலுப்பூர் வருவாய் கோட்டாட்சியர், இலுப்பூர் வருவாய் வட்டாட்சியர் மற்றும் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரிய அதிகாரி அவர்களே மற்றும் கருத்து சொல்ல வந்துள்ள சமூக ஆர்வலர்கள்

மற்றும் பனம்பட்டி, மருதான்தலை ஊராட்சிக்கு உட்பட்ட பொதுமக்கள் அனைவருக்கும் வணக்கத்தை தெரிவித்தார். இந்த கல்குவாரியானது பனம்பட்டி குக்கிராமத்தில் கனிம வளம் நிறைந்துள்ள. விவசாயம் செய்யாத நிலத்திற்கு அனுமதி கேட்டுள்ளனர் என்று தெரிவித்தார்.. இந்த குவாரி அமைய உள்ள பனம்பட்டி, மருதான்தலை கிராமத்திற்கு இந்த கல்குவாரியினால் போதிய நிதி மற்றும் வருவாய் கிடைக்கும். மேலும், ஊர் பொதுமக்களுக்கும் வேலைவாய்ப்பு கிடைக்கும் என்று கருத்து தெரிவித்தார். அதேபோன்று இதற்கு முன்பு பேசிய அண்ணன் அவர்கள் சொன்னது போல வெளியூரில் இருந்து வந்தவர்கள் ஆயிரம் கருத்துகளை சொல்லலாம். சித்தன்னவாசலுக்கும் இதற்கும் பல கிலோமீட்டர் தூரம் உள்ளன. குடுமியான்மலைக்கும் இதற்கும் பல கிலோமீட்டர் தூரம் உள்ளன. ஆகவே இந்த கல்குவாரி அமைவதால் எந்தவித பாதிப்பும் இல்லை என்பது என்னுடைய கருத்து மட்டுமல்ல இந்தப் பகுதியில் உள்ள ஒட்டுமொத்த பொது மக்களின் கருத்து எனக் குறிப்பிட்டார். எனவே, இந்த கல்குவாரியின் அனுமதியை அரசு விதிகளுக்கு உட்பட்டு கல்குவாரி நிறுவனத்தினர் அளித்த வாக்குறுதிகள் உரிய அதிகாரிகள் மூலம் ஆய்வு செய்து உரிய அனுமதி வழங்குமாறு கேட்டுக்கொள்வதாக தெரிவித்து தனது ஆதரவு கருத்தினை பதிவு செய்தார்.

13.திரு. ரமேஷ், சமூக ஆர்வலர், மருதான்தலை

தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரிய கருத்து கேட்பு கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இதனை தலைமையேற்று நடத்திக் கொண்டிருக்கும் இலுப்பூர் கோட்டாட்சியர், வருவாய் வட்டாட்சியர், மரியாதைக்குரிய மாசு கட்டுப்பாடு வாரிய அதிகாரி அவர்கள் அனைவருக்கும் வணக்கத்தினை தெரிவித்தார். எங்களது ஊராட்சியில் 10 வருடமாக அரசாங்கத்தின் சார்பாக பெறப்படும் நிதியை எங்கள் ஊராட்சிக்கு சரியாக அளிக்காததால் எந்த ஒரு அடிப்படை வசதிகளும் எங்கள் பஞ்சாயத்திற்கு செய்து தர முடியவில்லை. அரசு பேருந்து வரவில்லை. சாலை வசதி சரியாக இல்லை. எனவே எங்களது குடிசைத் தொழிலான கல்குவாரிகள் எங்களது ஊராட்சியில் அமைவதால் எங்களது ஊராட்சிக்கு குவாரி நிதி வருவதால் பல திட்டங்களை எங்கள் ஊராட்சிக்கு செய்ய முடியும் என்று குறிப்பிட்டார். எங்கள் ஊராட்சியில் கல்குவாரி அமைவதை எங்க ஊர் மக்களும் எங்கள் ஊராட்சி மக்களும் எந்த ஒரு எதிர்ப்பும் தெரிவிக்கவில்லை. தெரிவிக்கவும் மாட்டார்கள் என்று தெரிவித்தார். எனவே, இந்த கருத்துக்களை ஏற்று இதற்கு சம்பந்தமான அதிகாரிகள் நடவடிக்கை எடுத்து எங்கள் ஊராட்சியில் இந்த கல்குவாரியை அமையும் படி

செய்யுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்வதாக தெரிவித்து தனது ஆதரவு கருத்தினை பதிவு செய்தார்.

நன்றியுரை:

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அவர்கள் பொதுமக்கள் தங்கள் கருத்துக்களை எழுத்துவடிவில், மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்திலோ அல்லது தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் புதுக்கோட்டை அலுவலகத்திலோ சமர்பிக்கலாம் என்று தெரிவித்துக் கொண்டார். தி/எ். ஓம் ஸ்ரீ வாரி ஸ்டோன்ஸ் பிரைவேட் லிமிடெட் பொதுமக்கள் கருத்து கேடடுணரும் கூட்டத்திற்கு தலைமை ஏற்று நடத்திய வருவாய் கோட்டாட்சியர், இலுப்பூர் அவர்களுக்கு நன்றி கூறினார். இதர வருவாய் துறை அதிகாரிகள், தி/எ். ஓம் ஸ்ரீ வாரி ஸ்டோன்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவன இயக்குநர்கள், பிரதிநிதிகள், பணியாளர்கள், காவல்துறை அதிகாரிகள், பத்திரிக்கை நிருபர்கள் மற்றும் கலந்துகொண்ட பொதுமக்கள் அனைவருக்கும் நன்றியினை மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் தெரிவித்துக்கொண்டார்.

கூட்டம் இனிதே நிறைவுற்றது.

இணைப்பு:

1. கருத்துக் கேட்புக் கூட்டத்தில் கலந்துகொண்டவர்களின் வருகை பதிவேடு (அ).
2. திட்ட பிரதிநிதிகளின் நிழற்பட விளக்க உரை (ஆ)
3. கருத்துக் கேட்புக் கூட்ட நடவடிக்கைகளைப் பதிவு செய்த வீடியோ குறுந்தகடுகள் (இ).
4. சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு வரைவு விரிவான அறிக்கை மற்றும் தமிழ், ஆங்கிலத்தில் திட்ட சுருக்க உரைகள் (ஈ).

9/6/23

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,
தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம்,
புதுக்கோட்டை.

09.06.23

வருவாய் கோட்டாட்சியர்,
இலுப்பூர்.